## அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை-2.
## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் சுமார் 1800 சதுரஅடி பரப்பளவு கொண்ட இடத்தில் வணிக உபயோகம் / இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்க சுமார் மூன்று ஆண்டுகளுக்கு அதாவது ஒவ்வொரு ஆண்டும் 11 மாதங்களுக்கு மிகாமல் மூன்று முறை மட்டும் உரிமம் வழங்க ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறையில்) அதற்கான படிவத்தில் வரவேற்கப்படுகின்றன ஓப்பந்தப்படிவம் 27/05/2022 முதல் 20/06/2022 வரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 21/06/2022 அன்று மாலை 3.00 மணி வரை பெறப்பட்டு அன்றைய தினம் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்க்கு ரூ1000த்திற்கான தொகையை கேட்பு வரைவோலையாக M.D ,S.E.T.C, என்ற பெயரில் எடுத்து ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். கேட்பு வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிக்கப்படும்.

<u>ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகள்</u>

1. முன்வைப்புத்தொகையாக ரூ.25,000/- ஏதேனும் ஒரு தேசீயமயமாக்கப்பட்ட வங்கியில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் என்ற பெயரில் பெறப்பட்ட கேட்பு வரைவோலை ஒப்பந்த நமூனாவுடன் இணைக்கப்பட வேண்டும். மேற்சொன்ன முன்வைப்புத்தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏற்றுக் கொள்ளப்படாத ஒப்பந்த நமூனாவுடன் இணைக்கப்பட்ட முன்வைப்புத்தொகை உரிமம் உறுதி செய்யப்பட்ட பிறகு அல்லது மூன்று மாதத்திற்குப் பின் விண்ணபத்தின் பேரில் உரியவருக்குத் திருப்பித் தரப்படும். இத்தொகைக்கு எவ்வித வட்டியும் தரப்படமாட்டாது.
2. உரிமக்காலம் சுமார் 3 வருடம் காலம் இருப்பினும் முதற்கட்டமாக இடத்தை பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து 11 மாதங்களுக்கு உரிமதாரர் மாத உரிமத்தொகையை ஒவ்வொரு மாதமும் நிலுவையின்றி காலதாமதமின்றி செலுத்தி வருவதுடன் உடன்படிக்கையில் கண்ட ஷரத்துக்களை மீறாதபட்சமாக இரண்டு முறை உரிமம் புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு 11 மாதத்திற்கும் முந்தைய மாத உரிமத்தொகையில் 5% உயர்வு செய்து உரிம கட்டணம் நிர்ணயிக்கப்படும்.
3. ஒப்பந்த நமூனாவில் மாத உரிமத்தொகை எவ்வளவு என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.ஒப்பந்தப்புள்ளியில் கோரும் தொகை ஒரு மாதத்திற்கு மட்டுமே.
4. இதற்கு முன் நடத்தி/ செய்து வந்த கடை/ தொழில் முழு விபரங்கள். வருமானவரிச் சான்றிதழ் Aadhar card, PAN Card மற்றும் GST எண் முதலியவற்றை இப்படிவத்துடன் கட்டாயம் இணைக்க வேண்டும். முதல் கவர் / உறையில் உரிமம்கோரும் உரிமதாரரால் குறிப்பிட்டவற்றை பரிசீலித்து அதில் தகுதி பெற்றவரின் 2வது கவர் / உறையினை திறக்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.
5. ஒப்பந்தபுள்ளி இரண்டு பிரிவாக திறக்கப்படும் ஒப்பந்தபுள்ளி நாளன்று கவர் / உறை–1 குறிப்பிட்டுள்ளவற்றிற்கு தக்க நகலுடன் நிரப்பப்பட வேண்டும். முதல் கவர் / உறையில் உரிமைகோரும் உரிமதாரரால் குறிப்பிட்டுள்ளவற்றை பரிசீலித்து அதில் தகுதி பெற்றவரின் 2வது கவர் / உறையினை திறக்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.
6. உரிமதாரரை தேர்ந்தெடுக்கும் முறை: ஒப்பந்தப்புள்ளியில் (இரண்டாம் உறையில்) கோரப்படும் தொகையை ஒப்பிட்டுப் பார்த்து அதிக தொகை கோரியவருக்கு உரிமம் வழங்கப்படும்.

7. உரிமக்கட்டணத்தை ஒவ்வொரு முறையும் அந்த மாதம் 10-ம் தேதிக்குள் முன்பணமாக செலுத்த வேண்டும். மேலும் ஆறு மாத உரிமத்தொகையை காப்புறுதித் தொகையாகவும் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ரூ.3,00,000/– க்கான வங்கிப்பிணையம் மற்றும் மின் இணைப்பிற்கான முன்பணம் ரூ.50,000/- உரிமம் உறுதி செய்யப்பட்ட 15 தினங்களுக்குள் செலுத்த வேண்டும்.

8. உரிமம் ஒப்புக் கொள்ளப்பட்டு, நிர்வாகம் அனுமதித்த நாள் முதல் "உரிமம்" வழங்கப்பட்டதாகக் கொண்டு உரிமத்தொகை கணக்கிடப்படும்.
9. உரிமதாரருக்கு 1800 சதுரஅடி பரப்பளவு கொண்ட இடத்தில் வணிக உபயோகம் / இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்க உரிமத்திற்குவிடப்படும்.
10. தேர்வு செய்யப்பட்ட உரிமதாரர் உரிமம் உறுதி செய்யப்பட்ட 15 தினங்களுக்குள் முன்வைப்புத்தொகை மற்றும் வங்கிப்பிணையம் ஆகியவற்றை கொடுத்து இரண்டு முத்திரைத்தாளில் (ஒவ்வொன்றும் ரூ.100/- மதிப்புடையது) உரிம உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.
11. இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமத்தொகையை ஒவ்வொரு முறை அந்த மாதம் 10-ம் தேதிக்குள் முன்பணமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் என்ற பெயரில் பெறப்பட்ட கேட்புறுதி காசோலை மூலமாக கிளை மேலாளர், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், தஞ்சாவூர் அவர்களிடம் செலுத்த வேண்டும். மேலும் உரிமத்தொகையுடன் அதற்கான தற்போது நடைமுறையிலுள்ள சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Service Tax) 18% யையும் (மாறுதலுக்குட்பட்டது) சேர்த்து செலுத்த வேண்டும். உரிமத்தொகை, மின் கட்டண தொகை மற்றும் தண்ணீர் கட்டணம், கழிவுநீர் கட்டணம் உட்பட வேறு எந்த வரிகள் மாநகராட்சிக்கு உரிய நாட்களுக்குள் செலுத்தாவிடில் 10% வட்டியுடன் வசூலிக்கப்படும்.
12. மேற்கூறிய நிபந்தனையை நிறைவேற்றுவதில் தேவையற்ற காரணங்களைக் காட்டி காலதாமதம் செய்யப்படுமாயின் உறுதி செய்யப்பட்ட உரிமம் இரத்து செய்யப்படுவதுடன் முன்வைப்புத்தொகை எதுவும் திருப்பித்தரப்படமாட்டாது.
13. வாகனங்களுக்கு வசூலிக்கப்பட வேண்டிய கட்டண விபரம்:-

| | | |
|---|---|---|
| 1. | மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் | :ரூ. 5/- (6 மணி நேரம் வரை) - |
| | | :ரூ.10/- (12 மணி நேரம் வரை) |
| 2. | சைக்கிள் | : ரூ. 5/- (நாள் ஒன்றுக்கு) |
| 3. | நான்கு சக்கர வாகனம் | :ரூ.20/– (6 மணி நேரம் வரை) |

14. மேற்கண்ட கட்டணம் சுமார் 12 மணி நேரத்திற்குரியது. மேற்கண்டுள்ள கட்டணத்திற்கு மேல் கூடுதலாக வசூலித்தாலும் அது குறித்து புகார் ஏதேனும் பெறப்பட்டாலும் வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்யப்படும். சேவை குறைபாட்டின் மீது எழும் புகார்/ வழக்குகளுக்கு இக்கழகம் பொறுப்பேற்காது.
15. உரிமதாரர் தொடர்ந்து இரண்டு மாதம் உரிமத்தொகை, மின் கட்டணத்தொகை மற்றும் தண்ணீர் கட்டணம், கழிவுநீர் கட்டணம் உட்பட வேறு எந்த வரிகள் மாநகராட்சிக்கும் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரியினை உரிய நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் மின் இணைப்பினை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
16. உரிமத்திற்கு விடப்பெற்ற இடத்தில் ஏற்படுகின்ற பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் கட்டிடத்தில் உள் பூச்சு, வெளி பூச்சு ஆகியவைகளுடன் உரிமத்திற்கு விடப்பட்ட இடத்தினை அழகுபடுத்துதல் (Colour painting & Decoration) போன்றவைகளை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் நிர்வாக அனுமதியுடன் உரிமதாரர் தங்கள் சொந்த செலவிலேயே செய்து கொள்ள வேண்டும்.

17. உரிமதாரர் ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தான் வசிக்கும் வீட்டு முகவரி சான்று ஒன்றும் பாஸ்போர்ட் அளவில் . இரண்டு போட்டோ நகல்களுடன் ஆதார் கார்டு மற்றும் PAN Card ஆகியவைகளின் நகலையும் உரிம உடன்படிக்கை செய்யும் முன்பு சமர்ப்பிக்க வேண்டும்.
18. உரிமம் அளித்த பிறகு உரிமதாரர் நிறுவனத்தின் முன் அனுமதியின்றி உரிமம் பெற்ற இடத்தில் எவ்வித மாற்றங்களும் செய்யக்கூடாது.

19. உரிமம் அளித்த பிறகு உரிமதாரர் ஒரு கிரிமினல் குற்றவாளி என்றோ அல்லது கிரிமினல் குற்றங்கள் மற்றும் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டது தொடர்பாக உரிமதாரர் மீது ஏதேனும் விசாரணை இருப்பதாக தெரிய வந்தாலோ எவ்வித முன் அறிவிப்புமின்றி உரிமத்தை இரத்து செய்ய இக்கழகத்திற்கு உரிமை உண்டு.

20. உரிமம் அளித்த பிறகு உரிமதாரர் தன்னிச்சையாக வேறு ஒருவரை வணிக உபயோகத்திற்கு பயன்படுத்த அனுமதிப்பது பின்னர் தெரிய வந்தால் உரிமத்தை இரத்து செய்ய இக்கழகத்திற்கு உரிமை உண்டு.
21. எதிர்பாராத வகையில் பொது நலன் கருதி எடுக்கப்படும் முடிவுகளால் உரிமதாரருக்கு நட்டம் ஏற்பட்டால் அதற்கு நிர்வாகம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

22. வணிக உபயோகம் நடத்துவதற்குரிய உரிமம் மாநகராட்சி/ நகராட்சி/ உள்ளாட்சித்துறை மின்வாரியம் ஆகியோரிடமிருந்து பெறுதல் அதற்கான வரி முதலிய செலவினங்கள் அனைத்தையும் உரிமதாரர் தாங்கள் சொந்த செலவிலேயே காலதாமதமின்றி செய்து கொள்ள வேண்டும். இப்போக்குவரத்துக் கழகம் எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது. மேலும் உரிமதாரர் தன் நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குரிய வைப்பு நிதி காப்பிட்டுத் தொகைகள் மற்றும் இதரவைகளை செலுத்துவது உட்பட அனைத்து சட்டரீதியான கடைமைகளை செய்வது உரிமம் பெறுபவரின் பொறுப்பாகும்,

23. உரிமத்திற்காக விடப்பட்ட இடத்தை எந்த நிபந்தனையுமின்றி எந்த நேரத்திலும் பரிசோதிக்கவும் மற்றும் பார்வையிடவும் இப் போக்குவரத்துக்கழக அதிகாரிகளுக்கு மற்றும் அனுமதி பெற்ற இப் போக்குவரத்துக்கழக அலுவலருக்கு உரிமையுண்டு.
24. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு படிவத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு படிவத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.
25. உரிம உடன்படிக்கையில் அனுமதிக்கப்பட்ட பொருட்களைத் தவிர பிற பொருட்களையோ அல்லது தடை செய்யப்பட்ட பொருட்களையோ அல்லது சட்டப்படி விற்பனை செய்ய அல்லது உபயோகிக்க அனுமதி மறுக்கப்பட்ட பொருட்களையோ விற்பனை செய்யக்கூடாது.

26. எவ்வித காரணமும் கூறாமல் எந்த ஒரு அல்லது அனைத்து உடன்படிக்கை ஷரத்துக்களையும் நிராகரிக்கப்பதற்கு மேலாண் இயக்குநர், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் சென்னை அவர்களுக்கு முழு உரிமையுண்டு.
27. உரிமம் உடன்படிக்கை ஏற்படும் காலத்தில் நிர்ணயிக்கப்பெற்ற மாத உரிமத் தொகையை மாற்றி நிர்ணயம் செய்யவோ , வழங்கப்பெற்ற உரிமத்தை எவ்வித காரணமும் கூறாமல் இரத்து செய்யவோ மேலாண் இயக்குநர் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் சென்னை அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

28. உரிமம் கோருபவரின் கல்வித் தகுதியினைக் கல்வித்துறை வழங்கிய சான்றிதழ்களை சமர்பிக்க வேண்டும்

29. மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் வாடகை சட்டம் மற்றும் இதர சட்டத்தின் பலன்கள் பொருந்தும் என்று காரணங்காட்டுவதுடன் பொதுமக்களின் நன்மைக்கும் மற்றும் அரசுக்கும் விரோதமாக செயல்படும்பட்சத்தில் உறுதி செய்யப்பட்ட உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படுவதுடன் முன் வைப்புத் தொகையை எதுவும் திருப்பித் தரப்படமாட்டாது.

30. உரிமதாரர் தன்னிசையாக வேறு ஒருவரையோ அல்லது அவரது வாரிசையோ அல்லது அவரது உரிமதாரரின் வாரிசையோ அல்லது பிணாமி நபரையோ அல்லது மற்றும் அவரால் அங்கிகரிக்கப்பட்ட பிரதிநிதியோ வணிக உபயோகத்திற்கு / இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்க பயன்படுத்துவது தெரிய வந்தாலோ அல்லது அவரது பிணாமி ஆட்கள் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரிய வந்தாலோ உரிமத்தை உடனடியாக இரத்து செய்ய மேலாண் இயக்குநர். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் சென்னை அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

31. உரிமம் கோரும் உரிமதாரருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தவிர வேறு எந்த சிறு பகுதியையும் ஆக்கிரமிக்கவோ அல்லது அனுபவிக்கவோ உரிமம் கோருபவருக்கு எந்த விதத்திலும் உரிமையில்லை.

32. தமிழ்நாடு பொது வளாகங்கள் (ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுகை ) சட்டம் 1975 வினைப் பின்பற்றி நடந்து கொள்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

33. தமிழ்நாடு பொது வளாகங்கள் (ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுகை ) சட்டம் 1975 வினைத் தவிர வேறு எந்த பொது சட்டமோ மற்ற இதர சட்டங்களின் படி உரிமை கோரும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் சென்னை ஏற்படும் எந்தவித பிரச்சனைக்கும் பரிகாரம் கோரமாட்டேன், தமிழ்நாடு பொது வளாகங்கள் (ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுகை) சட்டம் 1975 வில் தெரிவித்துள்ள கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள எஸ்டேட் ஆபிஸரிடம் ( Estate officer ) கடை/வணிகம் நடத்தும் போது ஏற்படும் எல்லாவிதமான பிரச்சினைகளையும் அவரிடம் முறையிட்டு பரிகாரம் பெற்றுக்கொள்வேனே தவிர எந்தவித உரிமையியல் நீதிமன்றத்தையும் இது சம்பந்தமாக வழக்கு ஏதும் தொடர மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.

34. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் ஷரத்துக்களுக்கு விரோதமாக உரிமைகோருபவர் நடந்து கொண்டால் அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் ( தமிழ் நாடு ) லிமிடெட் சென்னைக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு உரிமம் கோருபவர் பொறுப்பேற்க நேரிடும்.

மேலாண் இயக்குநர்

1) பெயர் :

2) முகவரி மற்றும் ஒப்பந்ததாரரின் நடப்பு அல்லது சேமிப்பு கணக்கு எண் விபரம் :

3) தொழில் முன் அனுபவ விபரம் :
4) முந்தைய ஒப்பந்தங்களின் விபரங்கள் :
5) சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களின் செயலாக்கம் குறித்த விபரங்கள் :

6) நிதிசார் நிலை :
7) கல்விதகுதி விபரம் :
8) தனிநபர் (அல்லது) நிறுவனம் இறுதியாக செலுத்திய வருமான வரிக்கணக்கு விபரம் :

9) ஆதார் எண் :
10) PAN எண் :
11) GST எண் :
12) தொலைபேசி/ அலைபேசி எண் :
13) தங்களை பற்றிய முழு விபரம் அறிந்த நபரின் பெயர் மற்றும் முகவரி :

14) முன்வைப்புத் தொகை:-
கேட்புறுதிக் காசோலை எண் :

தேதி :

குறிப்பு:

- மேற்குறிப்பிட்டவற்றுக்கான நகல் இத்துடன் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். மேலும் **பக்க எண் 1 முதல் 5 வரை உறை ஒன்றில் இணைக்கப்பட வேண்டும்.**

- உறை-1னை தனி கவரிலும், உறை-2னை தனி கவரிலும் இரண்டு கவரையும் சேர்த்து ஒரு பெரிய கவரிலும் வைத்து, ஒப்பந்தப்புள்ளி விவரங்களை அனைத்து கவரிலும் பெரியதாகவும்,தெளிவாகவும் எழுதி ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பிக்க வேண்டும் .

உரிமம் கோருபவரின் கையொப்பம்

**அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை–2**

ஒப்பந்தப்புள்ளி படிவம்

**(உறை–2ல் பக்க எண் 6 மட்டும் இணைக்கப்படவேண்டும்)**

**-------------------------**

பெறுநர்:

போட்டோ

இரசீது எண்:

நாள் :

**நமூனா**

| மாத உரிமத்திற்கு விடப்படும் இடத்தின் விபரம் | உரிமக்காலம் | விண்ணப்பதாரர் கோரும்மாத உரிமத்தொகை (எண்ணாலும் எழுத்தாலும் )ரூ. + GST |
|---|---|---|
| அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் சுமார் 1800 சதுரஅடி பரப்பளவு கொண்ட இடத்தில் வணிக உபயோகம் / இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்க | 33 மாதங்கள் | |

ஒப்பந்ததாரர் கையொப்பம்